# சிறப்புத் தேவை உள்ளவர்களுக்கான திறன் மேம்பாடு

## கழிப்பறை திட்டம்

**அனுபவம் உள்ளவர்களால் 'வேலை' என சாதாரணமாக எடுத்துக் கொள்ளப்படுவது, சிறப்புத் தேவைகள் உள்ளவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தலாம்.** கழிவறையை பயன்படுத்தியப் **பிறகு,** சிறப்பு தேவை உள்ள ஒரு **நபருக்கு குறைந்தபட்சம்** 10 **நிமிடங்கள் இடைவெளி கொடுக்கப்பட வேண்டும்.**

கழிப்பறை திட்டமானது கழிவகற்ற போக, கழிவறையை பயன்படுத்த, கழிவறையை பயன்படுத்திய பிறகு தன்னைத்தானே சுத்தம் செய்து கொள்வதற்கான உதவியைச் சார்ந்திருக்கும் சிறப்பு குழந்தைகள் / பெரியவர்களுக்கானது. கழிவறையை மற்றவரை சார்ந்திராமல் பயன்படுத்துவது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

- கழிவறையை (குறிப்பாக பள்ளியில் அல்லது அறிமுகமில்லாத இடத்தில்) பயன்படுத்த விரும்புகிறோம் என்று கேட்பது அல்லது அதற்காக தொடர்புகொள்வது.
- மறைப்பு நிலை / பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கதவைப் பூட்டுதல் மற்றும் திறத்தல் (குழந்தைகள் / வயது வந்தோர் கதவைப் பூட்டிய பிறகு திறக்க முடியாது என்று பெற்றோர்கள் கவலைப்படுகிறார்கள்). 1 ரூபாய் நாணயத்தைப் பயன்படுத்தி சாவி இல்லாமல் சே:ப்டி அன்லாக் அமைப்பை நிறுவ கார்பென்ட்ரை கொண்டு இதைத் தீர்க்கலாம்.
- ஆடைகளை சரியான முறையில் அணிதல் (ஆட்டிசம் உள்ள பலர் பேண்ட் மற்றும் உள்ளாடைகளை முழுவதுமாக கழற்றுவார்கள் அல்லது சில சமயங்களில் கழிவறைக்குள் நுழைவதற்கு முன்பே கழற்றுவார்கள் ).
- தன்னைத் தானே ஆசுவாசப்படுத்த சரியான நிலையில் உட்காருவது அல்லது நிற்பது
- ஜெட் ஸ்ப்ரே உபயோகித்து கழுவுதல் (பல பெற்றோர்கள்

கழிவறைக்குள் நுழைந்து உடல் சுத்தம் செய்ய உதவ வேண்டியதாய் உள்ளது, இது தவிர்க்கப்பட வேண்டும்).

- ஆடைகளை சரியான நிலைக்கு இழுத்துவிடல்
- ஃப்ளஷிங்
- கழிப்பறை இருக்கையை சுத்தமாக வைத்தல்
- கைகளை கழுவுதல்

**நிலை 1**

**(சொற்களை சரியாக உச்சரிக்க முடியாதவர்களுக்கு, AAC கார்டு என்பது முக்கியம், இது கழிப்பறையின் லேபிளிடப்பட்ட படத்துடன் கூடிய ஃபிளாஷ் கார்டு ஆகும்).**

- AAC கார்டில் உள்ள கழிவறையை மாணவர் சுட்டிக்காட்டுவார் (முழுத் தூண்டுதலில்) - தாயின் உதவியுடன் உடனடியாக கழிப்பறைக்குச் செல்வார்.
- கழிவறைக்குள் நுழையவும்
- கதவைப் பூட்டவும் (கதவு பூட்டு வெளியில் இருந்து 1 ரூபாய் நாணயத்துடன் திறக்கும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். சேஃப்டி லாக் அமைப்பை நிறுவ கார்பெண்டர் இருப்பார்).
- ஆடைகளை கீழே இழுக்கவும்
- தன்னை விடுவித்துக் கொள்ளச் சொல்லவும்.
- தாய் தனக்கு மறைப்பு நிலை வழங்க அவளை தன் முதுகுப்புறம் திருப்ப வேண்டும் (அல்லது பூட்டுதல் மற்றும் திறத்தல் ஆகியவற்றைத் தனித்தனியாகக் கற்பிக்கலாம், இதில் தாய் குளியலறையை விட்டு வெளியேறலாம்).
- பெரிய வேலை, சிறிய வேலை என்று பாராமல் முடித்த பிறகு, ஜெட் ஸ்ப்ரேயைப் பயன்படுத்துங்கள். அதனால் அவள் பழகிவிடுகிறாள். நிலை 1 இன் முடிவில் அவள் சொந்தமாகச் செய்யத் தொடங்க வேண்டும்.
- சோப்பால் கைகளை கழுவவும்.
- கழிப்பறையை சுத்தமாக இருக்கிறதா என்று சரிபார்க்கவும்?

- கதவை திறக்கவும்
- வெளியே வரவும்.
- *நிமிட இடைவெளியை தொடர்ந்து உடனடி பரிசு வழங்க வேண்டும்*

**நிலை 2**

1. காலையில் அவளுடன் கலந்துரையாடுங்கள் - “நீ எப்பொழுது கழிப்பறைக்குச் செல்ல நினைக்கின்றாயோ, தயவு செய்து கூப்பிடு/ உன் அட்டையை எடுத்துக் கொள்”.
2. இருப்பினும், அவள் சொந்தமாகச் செய்ய வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள்.
3. வாய்மொழியாக அவளுக்கு நினைவூட்டுங்கள். அவள் தானே படத்தை சுட்டிக் காட்டுவாள். அவள் தானே கழிப்பறைக்குச் செல்வாள். நீங்கள் பின்தொடர மாட்டீர்கள். அவள் வந்ததும், நீங்கள் பின்தொடருங்கள் . வாய்மொழியாக அறிவுறுத்தி வெளியில் இருங்கள்.
   - கதவைப் பூட்டு - அவள் பூட்டவில்லை என்றால், நீங்கள் வெளியில் இருந்து பூட்டி விடுங்கள். அவளால் திறக்க முடியாவிட்டால், 1 ரூபாய் நாணயத்துடன் நீங்கள் திறக்கவும்.
   - அவள் வெளியே வரும்போது, அவள் வெளியேறுவதைத் தடுக்கவும். திரும்பி சரிபார், இது சுத்தமாக இருக்கிறதா என்று "?
   - கழிப்பறை இருக்கையை 'சுற்றி சுற்றி' சுத்தம் செய்ய ஜெட் ஸ்ப்ரே பயன்படுத்தவும்.
   - கைகளை கழுவிய பின் வெளியே வரவும்.

**ஜெட் ஸ்ப்ரேயைப் பயன்படுத்துதல்**

- குழந்தை / வயது வந்தோருடன் உள்ளே செல்லவும்.
- மின் விளக்கை போடவும்.
- கதவை பூட்டவும்

***ஆரம்பத்தில் கை மேல் கை வைக்கவும்***

- தெளிக்கவும்
- ஃப்ளஷ் செய்யவும்

- கழிப்பறை சுத்தமாக இருக்கிறதா என்று சரிபார்க்கவும்.
- உங்கள் கைகளை கழுவவும்
- விளக்கை அணைக்கவும்.
- வெளியேறவும்
- கதவை மூடவும்

**மேலும் தகவலுக்கு**: **https://togetherfoundationtrust.org/**